# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# நான்காம் பத்து

## நான்காம் திருமொழி - மாற்றரசர்
## திருநாங்கூர்த் திருப்பதி 11
## 7. திருத்தெற்றியம்பலம்

** மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும் *
மற்றவர் தம் காதலிமார் குழையும் * தந்தை
கால் தளையும் உடன் கழல வந்து தோன்றிக் *
கதநாகம் காத்தளித்த கண்ணர் கண்டீர் **
நூற்றிதழ் கொள் அரவிந்தம் நுழைந்த பள்ளத்து *
இளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின் *
சேற்றளையில் வெண்முத்தம் சிந்தும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 1

பொற்றொடித் தோள் மடமகள் தன் வடிவு கொண்ட *
பொல்லாத வன்பேய்ச்சி கொங்கை வாங்கி *
பெற்றெடுத்த தாய் போல மடுப்ப * ஆரும்
பேணா நஞ்சுண்டு உகந்த பிள்ளை கண்டீர் **
நெல் தொடுத்த மலர் நீலம் நிறைந்த சூழல் *
இருஞ்சிறைய வண்டொலியும் நெடுங்கணார் தம் *
சிற்றடி மேல் சிலம்பொலியும் மிழற்றும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 2

படல் அடைத்த சிறுகுரம்பை நுழைந்து புக்குப் *
பசு வெண்ணெய் பதம் ஆரப் பண்ணை முற்றும் *
அடல் அடர்த்த வேற்கணார் தோக்கை பற்றி *
அலந்தலைமை செய்து உழலும் ஐயன் கண்டீர் **
மடல் எடுத்த நெடுந்தெங்கின் பழங்கள் வீழ *
மாங்கனிகள் திரட்டு உருட்டா வருநீர்ப் பொன்னி *
திடல் எடுத்து மலர் சுமந்தங்கு இழியு நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 3

வாராரும் முலை மடவாள் பின்னைக்காகி *
வளை மருப்பில் கடுஞ்சினத்து வந்தாள் ஆர்ந்த *
காரார் திண்விடை அடர்த்து வதுவை ஆண்ட *
கருமுகில் போல் திருநிறத்து என் கண்ணர் கண்டீர் **
ஏராரும் மலர்ப் பொழில்கள் தழுவி எங்கும் *
எழில் மதியைக் கால் தொடர விளங்கு சோதி *
சீராரும் மணிமாடம் திகழும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 4

கலை இலங்கும் அகல் அல்குல் கமலப் பாவை *
கதிர் முத்த வெண்ணகையாள் கருங்கண் ஆய்ச்சி *
முலை இலங்கும் ஒளி மணிப்பூண் வடமும் தேய்ப்ப *
மூவாத வரை நெடுந்தோள் மூர்த்தி கண்டீர் **
மலை இலங்கு நிரைச் சந்தி மாட வீதி *
ஆடவரை மடமொழியார் முகத்து * இரண்டு
சிலை விலங்கி மனம் சிறை கொண்டிருக்கும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 5

தான் போலும் என்று எழுந்தான் தரணியாளன் *
அது கண்டு தரித்திருப்பான் அரக்கர் தங்கள் *
கோன் போலும் என்று எழுந்தான் குன்றம் அன்ன *
இருபது தோள் உடன் துணித்த ஒருவன் கண்டீர் **
மான் போலும் மென்னோக்கின் செய்ய வாயார் *
மரகதம் போல் மடக்கிளியைக் கை மேல் கொண்டு *
தேன் போலும் மென்மழலை பயிற்றும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 6

பொங்கிலங்கு புரிநூலும் தோலும் தாழப் *
பொல்லாத குறள் உருவாய்ப் பொருந்தா வாணன் *
மங்கலம் சேர் மறை வேள்வி அதனுள் புக்கு *
மண்ணகலம் குறை இரந்த மைந்தன் கண்டீர் **
கொங்கலர்ந்த மலர்க் குழலார் கொங்கை தோய்ந்த *
குங்குமத்தின் குழம்பு அளைந்த கோலம் தன்னால் *
செங்கலங்கல் வெண்மணல் மேல் தவழு நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 7

சிலம்பின் இடை சிறு பரல் போல் பெரிய மேரு *
திருக்குளம்பில் கணகணப்பத் திருவாகாரம்
குலுங்க * நில மடந்தை தனை இடந்து புல்கிக் *
கோட்டிடை வைத்து அருளிய எங்கோமான் கண்டீர் **
இலங்கிய நான்மறை அனைத்தும் அங்கம் ஆறும் *
ஏழிசையும் கேள்விகளும் எண்திக்கு எங்கும் *
சிலம்பிய நற்பெரும் செல்வம் திகழும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 8

ஏழுலகும் தாழ் வரையும் எங்கும் மூடி *
எண்திசையும் மண்டலமும் மண்டி * அண்டம்
மோழை எழுந்து ஆழி மிகும் ஊழி வெள்ளம் *
முன் அகட்டில் ஒடுக்கிய எம் மூர்த்தி கண்டீர் **
ஊழி தொறும் ஊழி தொறும் உயர்ந்த செல்வத்து *
ஓங்கிய நான்மறை அனைத்தும் தாங்கு நாவர் *
சேழுயர்ந்த மணிமாடம் திகழும் நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலே 9

** சீரணிந்த மணிமாடம் திகழு நாங்கூர்த் *
திருத்தெற்றியம்பலத்து என் செங்கண்மாலை *
கூரணிந்த வேல்வலவன் ஆலி நாடன் *
கொடிமாட மங்கையர் கோன் குறையல் ஆளி **
பாரணிந்த தொல் புகழான் கலியன் சொன்ன *
பாமாலை இவை ஐந்தும் ஐந்தும் வல்லார் *
சீரணிந்த உலகத்து மன்னராகிச் *
சேண் விசும்பில் வானவராய்த் திகழ்வர் தாமே 10

**அடிவரவு:** மாற்றரசர் பொற்றொடி படல் வாராரும் கலை தான் பொங்கு சிலம்பின் ஏழுலகும் சீரணிந்த தூம்பு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---